# போதைப் பொருள் பயன்படுத்திய அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டம்! கழகத்தினர் கைது!



பொதுவெளியில் போதைப் பொருளை பயன்படுத்திய த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை கண்டித்தும் , அவரை பதவி நீக்க செய்ய வலியுறுத்தியும் விழுப்புரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி சார்பில் , மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.அன்பழகன் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.அன்பு ஆகியோர் தலைமையில் திருக்கோவிலூர் பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார். இதில் கழகத்தினர் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.



வேலூர் தெற்கு மாவட்ட மாணவர்அணி சார்பில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி. தேவராஜ் தலைமையில் த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவிநீக்ககம் செய்யக்கோரி ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மண்டல குழு தலைவர் வீனஸ் ஆர். நரேந்திரன் மாணவர் அணி துணை அமைப்பாளர் அருண் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்ட மாணவரணி சார்பில் போதைப்பொருள் பழக்கத்தை கண்டித்தும், அமைச்சரை பதவி நீக்கம் செய்ய கோரியும், கண்டன ஆர்ப்பாட்டம் கடலூரில் நடைபெற்றது. முன்னாள் கழக மாணவரணி செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ, இள.புகழேந்தி தலைமை தாங்கினார். மாணவரணி நிர்வாகிகள் சத்தியநாராயணன், பாலாஜி, ராதாகிருஷ்ணன், ஜெயபிரகாஷ், பகலவன்,திவ்யா ஆகியோர் முன்னணியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட, ஒன்றிய, மாநகர , பகுதி, பேரூர் மாணவரணி, இளைஞரணி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் திரளாக பங்கேற்றனர்.



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் போதை பொருள் பயன்படுத்திய அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி காட்பாடி சித்தூர் பஸ் நிறுத்தம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.சீனிவாசன் தலைமை தாங்கினார். பகுதி செயலாளர் ஜி.வன்னிய ராஜா, மாநகராட்சி துணை மேயரும் தெற்கு பகுதி செயலாளரு மான எம்.சுனில் குமார், ஒன்றிய செயலாளர்கள் தணிகாசலம், சரவணன் ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்டமாணவரணி துணை அமைப்பாளர்கள் சேது மாதவன், மணிகண்டன், சுரேஷ்குமார் குணசேகர் சதீஷ் ஸ்டாலின், லோகேஷ் இளைஞர் அணி சேர்ந்த டீட்டா சரவணன் சுரேஷ், தரணி அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் டி.ஆர்.டீக்கா ராமன்மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் த.வெ.க. அமைச்சர் சரத்குமார் பொது இடத்தில் போதைப் பொருள் உபயோகித்ததை கண்டித்து நேற்று (29.06.2026, திங்கட்கிழமை) கள்ளக்குறிச்சி கச்சேரி சாலை, அண்ணல் அம்பேத்கர் சிலை எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, இதில் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட மாணவரணி, இளைஞரணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





விழுப்புரம்வடக்குமாவட்டதி.மு.க.மாணவரணிசார்பில்திண்டிவனத்தில்த.வெ.கஅமைச்சர்சரத்குமாரைகண்டித்துநடைபெற்றகண்டனஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தி.மு.க.வினரை போலீசார் கைது செய்தனர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன் , சீனி ராஜ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.





அமைச்சரின் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு ஆதரவான கருத்தைக் கண்டித்து,கழக மாணவர் அணி சார்பில் தருமபுரியில் BSNL அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆளும் சோபா மாடல் அரசால் ஏவப்பட்ட காவல்துறையினர் கழகத்தினரை கைது செய்தனர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி,தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் தருமசெல்வன், நகர செயலாளர் நாட்டான்.மாது, மாணவர் அணி அன்பரசன், சந்தர், இளைஞர் அணி சிவகுரு, அசோக்குமார், கலைசெல்வன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய கழகத்தினர் ஏராளமான தி.மு.க.வினர் கைது செய்யப்பட்டனர்.







போதைப் பொருள் பயன்படுத்தியத்திய த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை கழக மாணவர் அணி சார்பில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அருகில் கண்டன முழக்கங்களை எழுப்பி திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தே.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கழக முன்னோடிகள் சுமார் 1000 பேரை காவல்துறையினர் கைது செய்து மண்டபத்தில் அடைத்தனர்.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், போதை பழக்கம்.. த.வெ.க அமைச்சரை கண்டித்து மாவட்ட அமைப்பாளர்கள் காலேஜ் கு.ரவி, எம்.எஸ்.டி.கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் தொடங்கிய உடன் காவல் துறையினர் மாணவர் அணியினரை கைது செய்தனர். உடன் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், சு.ராஜாங்கம், மு.க.கௌதமன், மண்டி பிரகாஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.